ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1914/6 - 2015 මැයි මස 11 වැනි සඳුදා - 2015.05.11

1914/6 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### தென் மாகாண மாகாண சபை

தென் மாகாண மாகாண சபையின் 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தென் மாகாண பாதைப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் நியதிச் சட்டத்தினதும் தென் மாகாண மாகாண சபையின் 2009 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தென் மாகாண பாதைப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை (திருத்த) நியதிச் சட்டத்தினதும் கீழ் அமுலாக்கப்படும் கட்டளைகளும் நிபந்தனைகளும்

தென் மாகாண மாகாண சபையின் 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தென் மாகாண பாதைப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பிரதான நியதிச் சட்டத்தின் 41 ஆவது பிரிவினதும் 2009 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தென் மாகாண பாதைப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை (திருத்த) நியதிச் சட்டத்தினதும் அதிகாரங்களின் பிரகாரம் அமுலாக்கப்படும் கட்டளைகளும் நிபந்தனைகளும் இத்தால் வெளியிடப்படுகின்றது.

ஷான் விஜயலால் த சில்வா,<br>
முதலமைச்சரும், நிதி, திட்டமிடல், நீதியும் சமாதானமும்,<br>
உள்ளூராட்சி, போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் உள்நாட்டு வைத்தியம்,<br>
சுற்றுலா மற்றும் பொறியியலாளர் சேவை அமைச்சரும்,<br>
தென் மாகாணம்

### கட்டளை

1. இக்கட்டளை 2015 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, "பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் மற்றும் ஏனைய கட்டணங்கள் அறவிடுதல் தொடர்பான கட்டளை" என்று பெயர் குறிப்பிடப்படும்.

2. இக்கட்டளை தென் மாகாண சபையின் 2009 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, "பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் மற்றும் ஏனைய கட்டணங்கள் அறவிடுதல் சம்பந்தமான" 'கட்டளையின் கீழ் அதிகார சபையினால் நியமிக்கப்படும் கட்டணம் உட்பட்ட அட்டவணை இல. 4 இல் செயல்களும், அதற்காகச் செலுத்த வேண்டிய கட்டணங்கள் சம்பந்தமான திருத்தம் செய்வதுமாகும்.

*அட்டவணை 4*

**அதிகார சபையினால் நியமிக்கப்படும் கட்டணம்**

இவ்வட்டவணையின் I ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள ஏதாவதொரு விடயத்தில் ஒரு வேலைக்காகச் செலுத்தவேண்டிய கட்டணம் அவ்வட்டவணையின் II ஆம் நிரலின் முன்னால் காட்டப்பட்டுள்ள கட்டணங்களின் அளவாக இருக்க வேண்டும்.

| | *I ஆம் நிரல்* | *II ஆம் நிரல்* |
|---|---|---|
| | *விடயம்* | *செலுத்த வேண்டிய கட்டண அளவு ரூபா சதம்* |
| 1. | அனுமதிப்பத்திரமொன்றிற்கான விண்ணப்பப்படிவக் கட்டணம் | 200.00 |
| 2. | பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரத்திற்கான கட்டணம் | 3,000.00 |
| 3. | பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரம் குறிப்பிட்ட தினத்திற்கு நீடிக்காவிடின் | |
| | தண்டனைப் பணமாக ஒரு மாதத்திற்கு அல்லது அதில் ஒரு பகுதிக்கு | 250.00 |
| | அதில் கூடுதலாகும் ஒவ்வொரு மாதத்திற்காகவும் | 1,000.00 |
| 4. | இடை வீதிக் குறிப்பிற்காக (வருடத்திற்கு அல்லது அதில் ஒரு பகுதிக்கு) | 1,000.00 |
| 5. | பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரப் புத்தகம் (பிரதியொன்று வழங்கப்படும்) | 1,000.00 |
| 6. | பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திர லேபல் (பிரதி) | 500.00 |
| 7. | விசேட சுற்றுலா அனுமதிப்பத்திரம் முதலாம் தினத்திற்கு | 300.00 |
| | கூடுதலான ஒவ்வொரு தினத்திற்கு | 100.00 |
| 8. | தற்காலிக அனுமதிப்பத்திரம் (ஒரு தினத்திற்கு) கட்டணம் | 100.00 |
| 9. | அனுமதிப்பத்திரம் இல்லாத ஒரு நபருக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல் ஆசன அளவு | |
| | 42 அல்லது அதற்கு மேல் | 1,00,000.00 |
| | ஆசன அளவு 30 அல்லது 41 வரை | 75,000.00 |
| | ஆசன அளவு 30 ற்குக் குறைவு | 5,0000.00 |
| 10. | அனுமதிப்பத்திரம் உள்ள ஒரு பஸ் வண்டி உரிமையாளருக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல் - | |
| | ஆசன அளவு 42 அல்லது அதற்கு மேல் | 75,000.00 |
| | ஆசன அளவு 30 அல்லது 41 வரை | 56,250.00 |
| | ஆசன அளவு 30 ற்குக் குறைவு | 37,500.00 |
| 11. | அனுமதிப்பத்திரம் உள்ளவர் இறந்தபோது சட்டப்படி உரிமையாகும் நபருக்கு அனுமதிப்பத்திரத்தினைச் சாட்டுதல் (மனைவி/கணவன் அல்லது பிள்ளைகள்) | 5,000.00 |
| 12. | பஸ் வண்டி ஒன்றினை நேர அட்டவணையொன்றினது பிரதியொன்று வழங்குதல் | 100.00 |
| 13. | பொதுவான வேண்டுதலுக்காக நேர அட்டவணையினைத் திருத்துதல் | 250.00 |
| 14. | மேலதிக கட்டண அட்டவணைகள் வழங்குதல் | 100.00 |
| 15. | பஸ் வண்டி உரிமையாளரின் பொது வேண்டுதலுக்கு இணங்க நேர அட்டவணை திருத்தத்திற்கு | அறவிடுவதில்லை |
| 16. | பஸ் வண்டியினை மாற்றுவதற்காக | 2,000.00 |
| 17. | சேவையினைத் திருத்தம் செய்வதற்காக - | |
| | கிராமப் பகுதிகளுக்குத் திருத்தம் செய்வதற்காக | 2,000.00 |
| | A மற்றும் B வீதி வழியாகத் திருத்தம் செய்வதற்காக | 1,00,000.00 |
| 18. | சேவைக் கட்டணம் - மாகாணம் | 750.00 |
| 19. | சேவைக் கட்டணம் மற்றும் உட்செல்லும் கட்டணம் - மாகாணத்திற்குள் | 1,000.00 |
| 20. | சேவை மற்றும் உட்செல்லும் கட்டணம் அதிவேகப் பாதை | 1,500.00 |
| 21. | சேவைக் கட்டணம்/ உட்செல்லும் கட்டணம் செலுத்துதல் தாமதமாகுதல் (ஒரு மாதத்திற்கு அல்லது அதில் ஒரு பகுதிக்கு) 10% தண்டனைப் பணம் சட்டமாக்கப்படும். | |
| 22. | நேர அட்டவணை அல்லது வேறு கணினி அட்டவணை பெற்றுக்கொள்ளல் அச்சிடப்பட்ட ஒரு கடதாசிக்கு | 50.00 |
| 23. | தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் பஸ் வண்டி உரிமையாளருக்கு நிசிசெரிய செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கட்டணத்தின்படி அறவிடப்படும் நிர்வாகச் செலவு | 10% |

இக்கட்டளை 2015, யூன் மாதம் 01 ஆந் திகதி முதல் அமுலாக்கப்படும்.

5- 658

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.